முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1045

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

1. சர்வபலம் கொண்ட அரங்கனே 09.08.2022, செவ்வாய்கிழமை
சற்குருவாய் வாழும் தேசிகனே
சீர்திருத்தம் இந்த கலியினில் செய்து
சித்திமிகு ஞானயுகமாக மாற்றம் அருள
2. அருளவந்த ஆறுமுக ஞானியே
அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
பெருமைபட ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 24 நாள், 09.08.2022 செவ்வாய்கிழமை)
புகலுவேன் உலகோர் நன்மை பெறவே
3. நன்மை தரும் மகா சக்தியாக
ஞானத்தின் மகா சூட்சுமமாக
இம்மையில் அற்புதம் புரிகின்ற
எந்தன் அவதாரனே ஆறுமுக அரங்கனே
4. அரங்கனே உன் தர்மமும் உன் கொள்கையும்
அகிலத்தை மாற்றுவது உறுதி உறுதி
சண்முகனார் யான் உன்னுள் இருந்து சகல அற்புதத்தையும் நடத்தி வர
மண்ணுலகில் உன்னை ஏற்றவர்க்கு மரணமில்லா பெருவாழ்வு என்னருளால் உண்டுஉண்டு
5. உண்டான உன் தர்மத்தை காத்து
உயர்வாக தொண்டாற்றும் அன்பர்கள் அனைவருக்கும்
தண்டாயுதன் என் அருளும் பலமும்
தவபலமாய் கிட்டுவது உறுதி உறுதி
6. உறுதி தந்து அரங்கனே
உந்தனுக்கு நித்தம் நித்தம்
பெருமை மிக்க வரங்களை
பூவுலகில் சூட்சுமமாய் அருளிவர
7. வருகின்ற உன் தடத்தை
வையகத்தார் வணங்கிவிட்டால் போதும்
தருகின்ற உன் தர்மத்தை
தட்டாது உலகோர் ஆதரித்தால் போதும்
8. போதுமப்பா அவர்களுக்கெல்லாம் ஞானம்
புண்ணியவடிவிலும் பெருமைமிக்க உன் சன்மார்க்க வடிவிலும்
வடிவிலே பரிபூரண ஞான கதி வள்ளல் தன்மையாகக் கூடி
வருமுலகில் அன்னவர்கள் மூலமாக வையகம் ஞான யுகமாற்றம் அடையக்கூடும்
9. கூடவே அரங்கன் திருவடி பற்றி
குவலயத்தார் ஞான வழி நாடி வர
ஈடேற்றம் உலகில் சடுதி காணும்
இயம்பிய ஞான அறிவுரை ஆசி முற்றே –சுபம்–